பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

22 08 2024 **THURSDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஜம்மு காஷ்மீர் மற்றும் ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தல்கள் நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் நடைபெறுவது உறுதி செய்யப்படும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

- வேளாண் உற்பத்தி தொடர்பான புள்ளிவிவரங்கள் துல்லியமாக இருக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

- கொல்கத்தாவில் பயிற்சி பெண் மருத்துவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து மேற்கொண்டுவந்த வேலைநிறுத்த போராட்டத்தை தில்லி எயிம்ஸ் மருத்துவர்கள் விலக்கிக்கொண்டுள்ளனர்.

- தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி எழுதிய நூல்கள் அனைத்தும் நூல் உரிமைத்தொகை ஏதுமின்றி நாட்டுடமையாக்கப்படுவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

- ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில், இந்தியாவின்
    - Tanvi Reddy காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

---- *இனி விரிவான செய்திகள்* ---

<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீர் மற்றும் ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தல் நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் நடைபெறுவது உறுதி செய்யப்படும் என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இந்த தேர்தலுக்கான பார்வையாளர்கள் பங்கேற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பொது செலவின மற்றும் பாதுகாப்புப்பணிகள் தொடர்பான பார்வையாளர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றதாக அவர் தெரிவித்தார்.

தேர்தல் அமைதியாக நடைபெறுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளுமாறு இந்த கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

ஜம்மு காஷ்மீர் மக்கள் தேர்தலில் வாக்களிக்க உள்ளதை ஆர்வத்துடன் எதிர்நோக்கி இருப்பதாகவும் திரு ராஜீவ்குமார் தெரிவித்தார்.

<<<<<>>>>>

இதற்கிடையே, ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய மாநாட்டு கட்சியும், காங்கிரஸ் கட்சியும் இணைந்து போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இன்று ஸ்ரீநகரில் இதற்கான அறிவிப்பினை தேசிய மாநாட்டு கட்சியின் நிறுவனர் திரு ஃபரூக் அப்துல்லா அறிவித்தார்.

முன்னதாக, காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிரத்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தியுடன், திரு ஃபரூக் அப்துல்லா மற்றும் அவரது மகன் திரு ஒமர் அப்துல்லா சந்தித்து பேசினர்.

எத்தனை தொகுதிகளில் போட்டியிடுவது என்ற விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் இந்த கூட்டணி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

ராஷ்ட்ரிய ஜனதாதள கட்சியிலிருந்து விலகுவதாக பீகார் மாநில முன்னாள் அமைச்சரும், ராஷ்ட்ரிய ஜனதாதள கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான திரு Shyam Rajak கூறியுள்ளார்.

மாநிலங்களவைத் தேர்தலில் தமக்கு போட்டியிட வாய்ப்பு அளிக்காததையடுத்து அவர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக கட்சி வட்டாரங்களை மேற்கோள்காட்டி எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பீகார் முதலமைச்சர் திரு நிதிஷ்குமார் தலைமையிலான ஐக்கிய ஜனதள கட்சியில் திரு Shyam Rajak இணைய உள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

<<<<<>>>>>

மகாராஷ்ட்ராவில் உள்ள ஜவஹர்லால் நேரு துறைமுகத்தை மேம்படுத்துவதற்கான திட்டப்பணிகளை கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் இன்று தொடங்கிவைத்தார்.

அந்த துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களின் செயலாக்கம் குறித்தும் அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<>>>>>

கொல்கத்தாவில் பயிற்சி பெண் மருத்துவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து மேற்கொண்டுவந்த வேலைநிறுத்த போராட்டத்தை எயிம்ஸ் மருத்துவர்கள் விலக்கிக்கொண்டுள்ளனர்.

உச்சநீதிமன்றத்தின் அறிவுறுத்தலை ஏற்று இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மருத்துவர் சங்கம் கூறியுள்ளது.

இதேபோல், டாக்டர் ராம்மனோகர் லோகியா மருத்துவமனையின் மருத்துவர்களும் போராட்டத்தை விலக்கிக்கொள்வதாக அறிவித்துள்ளனர்.

இதற்கிடையே, நாடுமுழுவதும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சம்பவங்களை தடுப்பதற்கு வகை செய்யும் சட்டத்தை கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இதுதொடர்பான, வழக்கின் விசாரணை 15 நாட்களுக்குள் நிறைவடைய வேண்டும், குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை விதிப்பதற்கான சட்டப்பிரிவுகள், விரைவு நீதிமன்றங்களை ஏற்படுத்துவதற்கான அம்சங்கள் இதில் இடம்பெற வேண்டும் என்றும் செல்வி மம்தா பானர்ஜி அந்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

வேளாண் உற்பத்தி தொடர்பான புள்ளிவிவரங்கள் துல்லியமாக இருக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய வேளாண்துறை செயலர் திரு Devesh Chaturvedi வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இதுதொடர்பாக மாநில அரசு அதிகாரிகள் பங்கேற்ற மாநாட்டில் அவர் உரையாற்றினார்.

வேளாண்துறை வளர்ச்சிக்கான கொள்கைகளை வகுப்பதில் புள்ளி விவரங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

இதன்காரணமாக, அவை துல்லியமாக தயாரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

புள்ளிவிவரங்களை சேகரிக்கும் பணிகள் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெற வேண்டும் என்றும் திரு Devesh Chaturvedi தெரிவித்தார்.

<<<<<>>>>>

ஆப்பிரிக்காவின் உணவு தேவையை பூர்த்தி செய்வதில் இந்தியா உறுதியுடன் உள்ளதாக மத்திய வர்த்தகத்துறை செயலர் திரு Sunil Barthwal கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இந்தியா – ஆப்பிரிக்கா இடையேயான வர்த்தக மாநாட்டில் இன்று கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

அத்தியாவசிய உணவுப்பொருட்கள் ஆப்பிரிக்காவுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டுவருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

தொலைபேசிவழி சேவைகளும் ஆப்பிரிக்காவுக்கு வழங்கப்பட்டுவருவதாக திரு 'Sunil Barthwal தெரிவித்தார்.

<<<<<>>>>>

திரிபுராவில் பெய்த கனமழை காரணமாக பல்வேறு பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன.

குறிப்பாக அம்மாநிலத்தின் தென் மாவட்டங்களில் மழை வெள்ளத்தல் பொதுமக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேசிய பேரிடர் மீட்புப்படையினர் மீட்புப்பணிகளை மேற்கொண்டு வருவதாக அம்மாநில வருவாய்த்துறை செயலர் திரு Brijesh Pandey எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தேசிய பேரிடர் மீட்புப்படையின் கூடுதல் குழுக்கள் திரிபுரா வர உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இம்மாநிலத்தில் மழை வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 12-ஆக அதிகரித்துள்ளது.

இதற்கிடையே, மழை வெள்ள பாதிப்பு குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா, திரிபுரா முதலமைச்சரை தொலைபேசியில் தொடர்புகொண்டு வெள்ள பாதிப்பு குறித்து கேட்டறிந்தார்.

அம்மாநிலத்திற்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று திரு அமித் ஷா உறுதியளித்தார்.

<<<<<>>>>>

தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி எழுதிய நூல்கள் அனைத்தும் நூல் உரிமைத்தொகை ஏதுமின்றி நாட்டுடமையாக்கப்படுவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

80 ஆண்டுகால பொதுவாழ்வில் ஐந்து முறை முதலமைச்சராக பணியாற்றிய கருணாநிதி, 75 திரைப்படங்களுக்கு கதை - திரைக்கதை வசனங்களையும், 15 புதினங்களையும், 20 நாடகங்களையும், 15 சிறுகதைகளையும, 210 கவிதைகளையும் படைத்துள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இவற்றை தவிர கருணாநிதி தாம் பணியாற்றிய இதழ்களில் எண்ணற்ற தலையங்கங்களையும் எழுதியுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தமிழகத்தில் அனைத்து மகளிருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்துமாறு முதலமைச்சரிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதாக நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் கூறியுள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டம் முகுந்தராயபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுகுறித்து விரைவில் முதலமைச்சர் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பார் என்று தெரிவித்தார்.

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் மக்கள் நலனுக்காக பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் திரு துரைமுருகன் கூறினார்.

<<<<<>>>>>

லடாக்கின் லே-யில் பேருந்து ஒன்று பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் ஆறு பேர் உயிரிழந்தனர். 22 பேர் காயமடைந்தனர்.

லே-யில் இருந்து லடாக்கின் கிழக்குப்பகுதிக்கு சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து இந்த விபத்தில் சிக்கியதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<>>>>>

இஸ்ரேலில் தேசிய பாதுகாப்பிற்கான அமைச்சரவைக்குழு இன்று கூடி விவாதிக்க உள்ளது.

ஹமாஸுடன் சண்டைநிறுத்த ஒப்பந்தத்தை மேற்கொள்வது குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய ஜுனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Tanvi Reddy காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

சீனாவின் Chengdu-வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-13, 21-13 என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் Janyaporn Meepanthong –ஐ வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் Tankara Gnana Dattu Talasila மற்றும் Abhinav Garg காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

15 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் Tanvi Patri -யும், ஆடவர் இரட்டையர் பிரிவில் Raghul Kadabakula – Vedant Pahwa இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

------------------

சுவிட்சர்லாந்தின் நடைபெற்ற சர்வதேச மகளிர் செஸ் போட்டியில், இந்தியாவின் Padmini Rout தங்கப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில், ஒன்பது புள்ளிகளை பெற்று அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

--------------

இந்தோனேஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Rashmi Ganesh – Sania Sikkander இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 9-21, 21-19, 21-17 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் Meisa Rizka – Maulida Aprilia இணையை வென்றது.

மற்றொரு மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், Priya – Shruti misra இணையும் வெற்றிபெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றது.

-----------------

Winston Salem ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Dhakshineswar Suresh – இங்கிலாந்தின் Luca Pow இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-1, 4-6, 10-8 என்ற செட் கணக்கில், ஈக்வடாரின் Escobar – கஜகஸ்தானின் Aleksandar இணையை வென்றது.

**<<<<<END>>>>>**